உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் தற்போது அரசு கட்டி வரும் நவீன சிறைச்சாலைகளைப் போன்ற ஒன்றை அங்கே உருவாக்க, உத்திரவு பிறப்பிக்க வழி வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-05

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீலகிரி மாவட்டம் குளிர் பிரதேசமாக இருப்பதாலும், இரவு தட்பவெட்ப நிலை தற்போது உள்ளது போல், 3 டிகிரி செல்சியசாக சில மாதங்களில் இருப்பதாலும், அங்கு தங்கவிருக்கும் மக்களுக்கு விசேஷ அவசியமான சலுகை என்ற அடிப்படையில், சமவெளிப் பிரதேசத்திற்கு மாறுபட்ட வகையில், சிறைச்சாலை அமைக்கப்படுமா? எப்போது அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி சிறைச்சாலையில், தரையில் மரப்பலகை பதிப்பதற்காக 36 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அதற்குச் செலவிட செயற்குறிப்பை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

23 —

சிவகாசியை தனி வட்டமாக அமைத்தல்.

*11121 — திரு. ஜெ. பாலகங்காதரன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்து சிவகாசியை தனித் தாலுக்காவாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 பிப்ரவர் 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இக்கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக சிவகாசி மக்களின் சார்பாக வைக்கப்பட்டு இருக்கின்றது. தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலாவது இந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து, சிவகாசியைப் பொறுத்தமட்டிலும், அதிக அளவு பட்டாசுத் தொழிற்சாலைகளும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் உள்ள காரணத்தால், அங்கே இருக்கின்ற குளோரைட் உபயோகிக்கும் அளவிற்கும், சல்பர் என்ற பொருள் உபயோகிக்கும் அளவிற்கும் மேலும், இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும், பையர் ஓர்க்ஸ் தொழிற்சாலைகளுக்கும் ''ஆர்ம்ஸ் ஆக்ட் லைசென்ஸ் ரெனியூவலுக்கு'', நாங்கள் சிவகாசியிலிருந்து சாத்தூருக்குச் செல்ல வேண்டிய ஒரு கால கட்டத்தில் இருப்பதால், இதை இப்போதே பரிசீலித்து, இந்த ஆண்டே அரசு முடிவு எடுக்குமா என்பதை ஆவலோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து அறிக்கையை எதிர் பார்க்கிறோம். அறிக்கை வந்த பிறகு அரசு இது பற்றி ஆய்வு செய்யும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் இந்த சாத்தூர் தாலுக்காவிலே சிவகாசி தொகுதியைப் பொறுத்தமட்டிலும் அதிக அளவில் கிராமங்களைக் கொண்டுள்ளது. சாத்தூர் தொகுதியிலிருந்து மிகக் குறைந்த அளவு கிராமங்களே சாத்தூரில் சேர்க்கப்பட்டு உள்ளதால், உடனடியாக சாத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க, இந்த ஆண்டே ஏதாவது அஸ்ஸுரன்ஸ் கொடுக்க முடியுமா என்று அறிய ஆவலோடு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்த உறுதியையும் இப்போது வழங்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 24, டாக்டர் பீட்ரிக்ஸ் டி.சோசா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.